மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வகுப்புகளிலே சொல்லித்தரப்படுகின்ற பாடத் திட்டங்களின், சிலபஸின் அடிப்படையிலேதான் அந்த மாணவர்களுக்குப் பயன்பட்டு வருகின்ற அளவுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அதிலே மாறுதல்கள் ஏதாவது வேண்டுமென்று கேட்டால் இந்திய வானொலி நிலையத்தினர் அதற்கேற்றவாறு ஆராய்ந்து முடிவு செய்வார்கள்.

திரு. கு. காமாட்சி : வானொலியிலே பாடம் சொல்லிக் கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே ஆங்கிலப்பாடம் சொல்லிக் கொடுக்கும் பொழுது பள்ளியிலே பூகோளப் பாடம் நடந்து கொண்டிருக்கிறது. எனவே அந்தந்த நேரத்திற்குத் தகுந்தமாதிரி பாடங்கள் சொல்லித்தர வசதிகளைச் செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தத் தன்மையையொட்டிதான் நிகழ்ச்சி நிரல்களை எல்லாப் பள்ளிகளுக்கும் அவர்கள் அனுப்பி வைக்கிறார்கள். மாணவர்கள் கேட்பதற்கு ஏற்ற வகையிலே பீரியட்களை மாற்றியமைத்துக்கொள்ள வேண்டுமென்று பள்ளிகளுக்குச் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவர் அவர்களே, எல்லாப் பள்ளிகளுக்கும் பிரஜக்டர் வாங்கித் தருவதற்குத் திட்டம் இருக்கிறதா? அதற்கு நிதி ஒதுக்கல் ஏதாவது செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எல்லாப் பள்ளிகளுக்கும் அதை வாங்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துகின்ற நிலைமை இல்லை. சில பள்ளிகளிலே அந்த நிதியை வைத்துக் கொண்டே பிரஜக்டர் வாங்கி வைத்து இருக்கிறார்கள். சில பள்ளிகளிலே நன்கொடைகள் மூலமாகப் பெறப்பட்டு இருக்கிறது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் போன்ற நகரங்களிலே பெரும் பள்ளிகளிலே பிரஜக்டர்கள் வைத்திருக்கிறார்கள். அங்கங்கு உள்ள நிதி வசதிகளைப் பொறுத்து ஆண்டுக்காண்டு சேருகின்ற தொகையைச் சேர்த்து அப்படிப்பட்ட கருவிகளை வாங்குவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்த் தினசரியான மாலைமுரசு என்ற இதழில் மாணவர்களுக்கு என்ற பகுதியிலே மாணவர்களுக்குத் தேவையான கணிதம், பொருளாதாரம் போன்ற விளக்கங்களை அளிக்கிறார்கள், அதைப்பற்றி நம்முடைய அமைச்சர் அவர்களின் எண்ணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பாராட்டுவதற்கு வரவேற்க வேண்டிய வாழ்த்துதற்குரிய ஒரு செயலாகும்.

திரு. என். இராஜாங்கம் : தலைவர் அவர்களே, இப்பொழுது ஆங்கிலத்திலேதான் பயிற்சி நடப்பதாகத் தெரிகிறது. தமிழ்நாட்டிலே படிக்கிறவர்கள் தமிழிலேதான் படிக்கிறார்கள், எனவே பயிற்சியையும் தமிழிலே அமல்படுத்துவதற்கு அரசு ஆலோசனை கூறுமா?

1972 மார்ச் 30]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பெரும்பாலான மாணவர்களுக்குப் பாடத் திட்டங்கள் எல்லாம் தமிழிலேதான் நடைபெறுகின்றன, ஆங்கிலம் மட்டும் தான் ஆங்கிலத்திலே செல்லித் தரப்படுகிறது. கணக்கு, வரலாறு, புவியியல் போன்றவைகள் எல்லாம் தமிழிலேதான் நடைபெறுகின்றன.

திரு. எஸ். முருகையன் : தலைவர் அவர்களே, எல்லாப் பள்ளிகளும் வானொலிப் பெட்டிகள் வாங்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆறாவது வகுப்பிலிருந்து 11-வது வகுப்பு வரையில் நடக்கின்ற உயர்நிலைப் பள்ளிகளைத் தவிர 6-வது வகுப்பு முதல் 8-வது வகுப்பு வரையில் நடைபெறுகிற துவக்கப் பள்ளிகளும் இருக்கின்றனவே, அவைகளும் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவைகளும் வாங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அவர்களும் ஒலி-ஒலிக்கான தனிக் கட்டணத்தை வசூலிக்கிறார்கள். ஆடியோ விஷுவல் எஜுகேஷன் ஸ்பெஷல் பீஸ் என்ற வகையிலே வாங்குவதை வைத்து அவர்கள் வாங்கிக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அங்கேயும் வாங்கலாம்.

## கல்லூரிகளில் கடல்வளம் பற்றிய வகுப்புகள்

*791 வினா : திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

கடல் வளத்தைப் பற்றி தமிழகத்தில் எந்த எந்த கல்லூரிகளில் தற்போது பாடம் கற்பிக்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—

1. மாநிலக் கல்லூரி, சென்னை-5.
2. பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30.
3. கிறிஸ்தவக் கல்லூரி, தாம்பரம்.
4. அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

## தமிழ்நாடு கைத்தொழில் ஆசிரியர்கள் சங்கக் கோரிக்கைகள்

*792 வினா : திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு கைத்தொழில் ஆசிரியர்கள் சங்கம், கரூர் கிளையிலிருந்து அமைச்சர் அவர்களுக்குக் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, அந்த விண்ணப்பம் எப்பொழுது வந்தது? பரிசீலனை முடிவு பெறுமலிருந்தால் விரைவிலே பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே விண்ணப்பங்கள் பல்வேறு வகையிலே பல்வேறு இடங்களிலிருந்து அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

திருப்பூரைச் சேர்ந்தவர்களும் அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு 30 ரூபாய் என்று இருந்த சம்பளத்தை 60 ஆக உயர்த்தி இருக்கிறோம். முழு நேர ஆசிரியர்களாக ஆக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. 800 ஆசிரியர்கள் வரையில் முழுநேர ஆசிரியர்களாக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆங்காங்கு இருக்கின்ற இரண்டொரு பள்ளிகளையும் சேர்த்து அவர்களுக்கு வேலை அளித்து முழுநேர ஆசிரியர்களாக பீரியட்கள் வரத்தக்க அளவுக்கு ஆக்க முடியுமா என்பதைப்பற்றி கல்வித்துறையினர் கவனித்து வருகிறார்கள். அவர்கள் செலக்ஷன் கிரேட் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாநில அளவிலே நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். மாவட்ட அளவிலே கணக்கிட வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். மாவட்ட அளவிலே ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகமாகிற நேரத்தில் அதுபற்றிக் கவனிக்கலாம். முழுநேர ஆசிரியர்களாக ஆவதற்கு 9, 10, 11 வகுப்புகளிலும் கைத்தொழில் பாடத்தை வைத்தால் அந்தத் தன்மை கிடைக்கும் என்று கேட்டிருக்கிறார்கள். அது ஆராயப்பட வேண்டிய ஒன்று. அந்தப் பாடத்தை பரீட்சைக்குரிய பாடமாக ஆக்க வேண்டும், அப்படி வைத்தால்தான் மாணவர்கள் அக்கறையோடு படிப்பார்கள் என்ற கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள். இவையெல்லாம் அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருந்து வருகின்றன.

## ஊராட்சி ஒன்றியங்களில் விரிவாக்க அலுவலர்கள்

*793 வினா :—திரு. சி. இராமநாதன் : மாண்புமிகு கல்வி- உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எத்தனை பஞ்சாயத்து யூனியன்களில் தற்போது வருவாய் விரிவாக்க அலுவலர்கள்[ extention Ufficers (Revenue)] நியமிக்கப்பட்டுள்ளார்கள் ?

(இ) மீதமுள்ள பஞ்சாயத்து யூனியன்களில் எப்பொழுது நியமிக்கப்படுவார்கள் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) எழுபத்தைந்து.

(இ) உத்தேசமில்லை.

## மையூரா நதியின் குறுக்கே மேம்பாலம்

*794 வினு—திரு. ந. தருமலிங்கம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா ?

கள்ளக்குறிச்சி தாலுக்காவிலுள்ள அசகளத்தூர் அருகே ஓடும் மையூரா நதியின் குறுக்கே மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

---

## இரும்பூதிப்பட்டி, கொசூர் சந்தைகள்.

*795 வினு: திரு. பெ. சௌந்தரபாண்டியன்: 8—12—1971 அன்று பேரவையில் 158 எண்ணுள்ள கேள்வியை ஒட்டிய துணைக் கேள்விக்கு அளிக்கப்பட்ட விடையின் தொடர்பாக மாண்புமிகு கல்வி உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம் இரும்பூதிப்பட்டி, கொசூர் சந்தையை 1970–71-ல் ஏலம் எடுத்தவர் கட்ட வேண்டிய பாக்கித் தொகையை வசூலிக்க கோர்ட்டில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதா?

(இ) மொத்தம் எவ்வளவு தொகைக்கு எந்தத் தேதியில் தாக்கல் செய்யப்பட்டது ?

(உ) தொகை உடனடியாக வசூலிக்க உடன் ஜப்திக்குக் கோரப் பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை. ஏனெனில் ஏலதார் பாக்கித் தொகை முழுவதையும், மேலும் அபராதத் தொகை வட்டித் தொகை முழுவதையும் கட்டிவிட்டார் என்று மாவட்ட ஆட்சியாளர் இப்போது அறிவித்துள்ளார்.

(இ) (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இதே மாமன்றத்திலே நான் முன்பொருமுறை வினுவை எழுப்பிய நேரத்தில் கோர்ட்டிலே இருக்கிறது என்ற தகவலைக் கொடுத்தார்கள். இப்போழுது இல்லை யென்ற பதில் வந்திருக்கிறது. நாளை என்ன பதில் வருமோ ? இப்படித் தவருன தகவல்களை இந்த மாமன்றத்திற்குத் தருவதைப் பற்றி அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, முன்பு சொன்ன பதில், இரும்பூதிப் பட்டியிலுள்ள சந்தை ரூ. 32,101வுக்கும், கொசூரிலுள்ள சந்தை ரூ. 13,001-வுக்கும் ஏலம் விடப்பட்டன. இரும்பூதிப் பட்டி சந்தைக்காக செலுத்தப்